**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.808/அ5/2026 நாள். 02.2026.**

பொருள் பள்ளிக்கல்வி – சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் – 2025–2026 ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் தற்போது 12ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் வங்கிகணக்கு எண் சார்பான விவரங்களினை பதிவேற்றம் செய்தல் – சார்பாக.

பார்வை சென்னை–06 பள்ளிக் கல்வி இணை இயக்குநரின்(தொழிற்கல்வி) செயல்முறைகள், ந.க.எண். 57738/கே/இ2/2025, நாள்–17.02.2026.

பள்ளிக்கல்வி வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10, 11 ஆம் வகுப்பு பயின்று 2025–2026 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை ரூ.5000/–(மற்றும் வட்டித் தொகை) வழங்குவதற்கு பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகளின் படி தொகை ரூபாய்.195,12,69,500/– அரசால் நிதி ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 2025–2026 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறும் தகுதியான அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பு ஊக்கத்தொகையினை விடுபடாமல் பெற்று வழங்கிட, தற்போது அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயின்று வரும் அனைத்து மாணவர்களின் வங்கி கணக்கு எண் மற்றும் அஞ்சலக சேமிப்பு கணக்கு எண்களின் சார்பான விவரங்களை மாணவர்களின் வங்கி கணக்கு புத்தகம் மற்றும் அஞ்சலக சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகலினை மாணவர்களிடமிருந்து பெற்று சரிபார்த்திடவும் EMISல் பதிவு செய்திட, பதிவேடு ஒன்றினை தயார் செய்து அதில் கீழ்கண்ட விவரங்களினைப் பதிவு செய்யுமாறு அனைத்து அரசு/அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

## 2025–2026 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் விவரம்
## (அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகள் மட்டும்)

| Student Name | Aadhar Number | Bank Name & Post office Name | BranchName | Student Account Number & Post office Account Number | Bank IFSC Code Number |
|---|---|---|---|---|---|
| | | | | | |

மேலும், மாணவர்களின் வங்கி கணக்கு விவரங்கள் தவறுதலாக பெறப்பட்டு தகுதியான மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்படாத நிலை எற்படின், சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்படாத மாணவர்களால் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கக்கோரி பெறப்படும் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியரின் குறைதீர் முகாம்களில் பெறப்படும் மனுக்களுக்கு, சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் விவரங்களினை மேற்குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் பதிவேற்றம் செய்யும் ஆசிரியர்கள்/பணியாளர்களே முழுபொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 12 அம் வகுப்பு பயின்று வரும் மாணவர்களின் வங்கிக்கணக்கு எண் சார்பான விவரங்களினை பதிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு/அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

/ஒப்பம்/
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
தலைமை ஆசிரியர்
அரசு/அரசு நிதியுதவி மேல்நிலைப் பள்ளிகள்